1970 டிசம்பர் 2]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பலமுறை இதுபற்றி நாம் மத்திய அரசை வற்புறுத்தி கடிதங்கள் எழுதியிருக்கிறோம். நானும் நம் முதல் அமைச்சர் அவர்களும் நேரடியாக பிரதம மந்திரி அவர்களிடத்திலும், அங்குள்ள தொழில் அமைச்சர் அவர்களிடத்திலும் இதைப்பற்றி வாதித்தோம். அவர்களும் எங்கள் கருத்தை ஏற்றார்கள். நம் மாநிலத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்ற மாநிலங்களிலிருந்து நம்மை ஆதரிக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து பிரதம மந்திரி அவர்களிடமும், மத்திய அரசினிடத்திலும் இதைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதையும் அவர்கள் ஏற்று இடைக்காலத்தில் இதை கைவிடுவது இல்லை என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா: டால்மியா சிமெண்ட் தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள நம் அரசினர் பைலட் சிமெண்ட் பாக்டரியில் உற்பத்தியாகும் சிமெண்ட் நல்லமுறையில் இல்லை என்று சொல்லப்படுவது உண்மையா? சில மாதங்களாக அந்த பைலட் சிமெண்ட் பாக்டரியில் வேலை நடைபெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இனிமேலாவது அந்த சிமெண்ட் பாக்டரியில் நல்லமுறையில் கலவையைச் சேர்த்து நல்லமுறையில் சிமெண்ட் தயாரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உறுப்பினர் அவர்கள் அவர்களது கேள்வியைக் கேட்டார்கள். இது சிமெண்ட் உற்பத்தி பற்றிய கேள்வி. அது பைலட் ப்ராஜெக்ட். ஒரு முறையை எடுத்துச் சொல்வதற்காக உருவாகிய ஒரு தொழிற்சாலை. அந்த முறையை ஏற்றுக்கொள்பவர்கள் வேறு நாட்டில் இருக்கிறார்களா என்பதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும். அது இப்போது ஆரம்பிக்கப்பட்டதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்த பைலட் ப்ராஜெக்ட் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ப்ராஜெக்ட் தேவைதானா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது. அரசு அதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த பைலட் ப்ராஜக்டை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் இனிமேலும் இருக்கிறதா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி விரைவில் முடிவு செய்யும்.

நாமக்கல்லில் தொழிற்பேட்டை

* 94 வினா:—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் எப்போது தொழிற்பேட்டை துவக்கப்படும்?

(இ) அதன் உற்பத்தி பொருள்கள் எப்போது வெளிவரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) நாமக்கல்லில் ஆறு தொழிற்சாலை பிரிவுகளுடன் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் திட்டத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. அதற்காக தொடராச் செலவாக ரூ. 6,08,000 தொகையும் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கான வேலைகள் நடந்தேறி வருகின்றன.

[1970 டிசம்பர் 2

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : பொதுவாக, இந்தத் தொழிற் பேட்டைகளில் தனியார்கள் தொழில்கள் துவங்க வராமல் ஏராள மான இடங்கள் காலியாக இருப்பதாக அறிகிறேன். ஆனால் திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி வந்திருந்த நேரத்தில் இன்னும் அதிகமாக எங்களுக்கு இடங்கள் வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கின்றனர். அதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முன்னாலே, தொழிற்பேட்டைகளை சிலயிடங்களில் தொடங்கி அங்குதான் தொழில்களை தொடங்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதன் விளைவாக சில இடங்களில் தொழிற்பேட்டைகளுக்கு கிராக்கி இல்லாமல் இருந்தது. ஆனால் பலயிடங்களில் அதிகக் கிராக்கி இருந்தது. ஆகவே, இப் போது நம் அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய புதிய முடிவு, எங்கெங்கு தொழில் அதிபர்கள் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வருகிறார் களோ அவர்களுக்கு ஹயர் பர்சஸ் திட்டம் என்ற முறையில் எந்த இடமாக இருந்தாலும் அங்கு தொழிற்பேட்டைகள் அமைத்துக் கொடுக்க ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

மணியாச்சி ரயில் நிலையம்

* 95 வினா:—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியாச்சி இரயில்வே ஸ்டேஷனின் பெயரை மாற்றி வாஞ்சிநாதன் இரயில்வே ஸ்டேஷன் என்று பெயர் வைக்கும்படியாக மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் காங்கிரஸ்காரர்கள் உட்பட எல்லாக் கட்சியினருமே இந்தப் பெயர் மாற்றம் வரவேண்டுமென்று கேட்டும் அவர்கள் கவனிக்காத இந்த வேலையை அரசியல் தியாகிகள் விஷயத்தில் பரிவு காட்டி வரக்கூடிய இந்த ஆட்சியாவது இந்த நாட்டின் விடுதலைக் காக வேண்டி தன் இன்னுயிரை தியாகம் செய்த பகத் சிங் பரம்பரையைச் சார்ந்த இந்த வாஞ்சிநாதன் பெயரை வைப்பதற்கு இனிமேலாவது முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி ஏற்கனவே இரண்டு தனிப்பட்ட நபர்கள், ஒருவர் வாஞ்சிநாதபுரம் என்று பெயர் வைக்க வேண்டுமென்றும், இன்னொருவர் வீரவாஞ்சி என்று பெயர் வைக்க வேண்டுமென்றுள்ள கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதன் பேரில் அறிக்கை கேட்கப்பட்டது, போர்ட் ஆஃப் ரெவின்யூ மூலம் அறிக்கை கேட்கப்பட்டது. தற்போது இப்படி எந்த நட